**கவனிக்க**.- *2009.03.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1593 - 2009 මාර්තු 13 වැනි සිකුරාදා - 2009.03.13

*1593 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 320 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 324 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, மாச்சு மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : நெக்ஸ்ட் அன்ட் நெக்ஸ்ட் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீ. வி 60158
பதிவு செய்யப்பட்ட திகதி : 5 ஜுன் 2007
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 21ஏ, தில்லையடி புத்தளம்

சபையின் கட்டளைக்கிணங்க,

செயலாளர்கள்.

3-344

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : சீயனே பில்டிங் மற்றீரியல்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீ. வி 67104
பதிவு செய்யப்பட்ட திகதி : 2009.02.20
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 12, டி. எஸ். சேனாநாயக்கா மாவத்தை, அம்பாறை

சபையின் கட்டளைக்கிணங்க,

தரிந்த சந்துன் குமார சேனாநாயக்கா,
பணிப்பாளர்கள்

3-317

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கிணங்க ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிப் பதிவாளர் மாஅதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஈஸ்டன் மெட்டல் இன்டஸ்ரீஸ் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீ. வீ 66209,
பதிவு செய்யப்பட்ட திகதி : 2008.11.17
பதிவுசெய்யப்பட்ட அலுவலக
முகவரி : இல. 579, கண்டி ரோட், புலுகஹா ஜங்ஷன், களணி

சபையின் கட்டளைக்கிணங்க,

கன்சல்டன்ட்ஸ் கோபரேட் செகட்ரீஸ் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 689618

3-283/1

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கிணங்க ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிப் பதிவாளர் மாஅதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மில்லோ (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீ. வீ 67014
பதிவு செய்யப்பட்ட திகதி : 2009.02.11
பதிவுசெய்யப்பட்ட அலுவலக
முகவரி : இல. 158/33, தெமடகொட ரோட், கொழும்பு 08

சபையின் கட்டளைக்கிணங்க,

கன்சல்டன்ட்ஸ் கோபரேட் செகட்ரீஸ் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. 2689618

3-283/2

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) ஆம் இலக்கத்திற்கிணங்க ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனியின் பதிவாளர் மா அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : செக்ரோ செகியுரிடி சர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீ. வீ 67014
பதிவு செய்யப்பட்ட திகதி : 2009.02.08

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி :* இல. 46ஏ1, பெபிலியான ரோட், கங்கொடவில, நுகேகொடை.

சபையின் கட்டளைக்கிணங்க,

கன்சல்டன்ட்ஸ் கோபரேட் செகட்ரீஸ் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618

3-283/3

---

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் இலக்கத்திற்கிணங்க ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனி பதிவாளர் மா அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* ஈடன் வென்சர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீ. வீ 67034
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 2009.02.12
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி :* இல. 21/15, தர்மரத்ன எவன்யு, மொரட்டுவ

சபையின் கட்டளைக்கிணங்க,

கன்சல்டன்ட்ஸ் கோபரேட் செகட்ரீஸ் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. : 2689618

3-283/4

---

## கம்பனி பதிவு செய்தல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் இலக்கத்திற்கிணங்க ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிப் பதிவாளர் மாஅதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* அபேரத்ன என்டர்பிரைசஸ் (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீ. வீ 66907
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 2009.01.29
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி :* இல. 222, கலகிடியாவ, குளியாபிட்டிய

சபையின் கட்டளைக்கிணங்க,

கன்சல்டன்ட்ஸ் கோபரேட் செகட்ரீஸ் (பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. 2689618

3-283/5

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் இலக்க பிரிவின் கீழான அறிவித்தல்

*கம்பனியின் பெயர் :* பெயார் பக்ஸ் டெலிகொம்யுனிகேஷன் (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீ. வீ 66937
*பதிவு செய்யப்பட்ட திகதி :* 2009.01.30
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி :* இல. 183/ஏ, காலி வீதி, களுத்துறை (தெற்கு)

சபையின் கட்டளைக்கிணங்க,

ஸைய்க் அப்துல்லா முஹம்மது பாஹிம்,
செயலாளர்.

3-247

---

## கம்பனியின் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி மாற்றம் தொடர்பாக பொது மக்களுக்கான அறிவித்தல்

*கம்பனியின் புதிய பெயர் :* ஆரிய வென்சர் கெப்பிட்டல் (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனியின் முன்னைய பெயர் :* ஆரிய வென்சர் கெப்பிட்டலிஸ்ட் பிரைவேட் லிமிட்டெ
*கம்பனியின் பதிவிலக்கம் :* பீ. வீ 63139
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் புதிய*
*முகவரி :* இல. 163, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு - 05

3-251

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII இன் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. - (பிவிஎஸ்) 4982

*கம்பனியின் பெயர் :* டி லிவேரா இன்டஸ்றிஸ் (பிறைவட்) லிமிட்டட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி :* இல. 165, ஸ்ரீ விபுலசேன மாவத்தை, கொழும்பு 10
*நீதிமன்றம் :* வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இலக்கம் :* 40/2008/கோ
*நீதிமன்ற கட்டளைத் திகதி :* 2009.01.21
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி :* 08.10.2008
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர் :* பி. ஈ. ஏ. ஜெயவிக்கிரம அன்ட் ஜி. ஜே. டேவிட்
*முகவரி :* இல. மே/பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ், ரீஸ்ட்றக்சர் அன்ட் கோப்பரேட் றிக்கவறி, லெவல் 4, இல. 2 காசல் வீதி, கொழும்பு 4

3-252/1

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 346 (1) ஆம் பிரிவின் கீழான டீ லிவேரா இன்டஸ்றிஸ் லிமிடட் எனும் கம்பனியின் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பதிவு இல. - (பிவிஎஸ்) 4982*

*கம்பனியின் பெயர் : டி லிவேரா இன்டஸ்றிஸ் லிமிட்டட்*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக*
*முகவரி : இல. 165, ஸ்ரீ விபுலசேன மாவத்தை, கொழும்பு 10*
*நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)*
*வழக்கு இலக்கம் : 40/2008/கோ*
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர் : பி. ஈ. ஏ. ஜெயவிக்கிரம அன்ட் ஜி. ஜே. டேவிட்*
*முகவரி : இல. மே/பா. எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ், றிசக்ஷ அன்ட் கோப்பரேட் றிக்கவறி, லெவல் 4, இல. 2 காசல் வீதி, கொழும்பு 4*
*நியமன திகதி : 2009.01.21*

*3-252/2*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் : எல். ஓ. எல். சி மைக்கிரோ பினான்ஸ் கம்பனி லிமிட்டட்*
*கம்பனியின் பதிவு இல. : பி. பி. 3535*
*கம்பனியின் முகவரி : 100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய*
*கம்பனியின் திகதி : 2008 ஜுலை 3 ஆந் திகதி*

*சபையின் கட்டளைக்கிணங்க,*

*சி. எஸ். இம்மானுவேல்,*
*கம்பனியின் செயலாளர்.*

*2008, யூலை 3 ஆந் திகதி.*

*3-257*

---

**2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டவாக்கத்தின் 7 ஆம் இலக்க பிரிவின் 9 (1) பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்**

*கம்பனியின் பெயர் : அக்கிரிசீல் ஹொல்டிங்ஸ்*
*கம்பனியின் பதிவு இல. : பி. பீ. 3529*
*கம்பனியின் முகவரி : 100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய*

*சபையின் கட்டளைக்கிணங்க,*

*சி. எஸ். இம்மானுவேல்,*
*கம்பனியின் செயலாளர்.*

*2008 மே 02.*

*3-258*

---

**சட்டபூர்வமான அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்**

*மாத்தளை, கய்காவெளை, கம்பியடி எனுமிடத்தில் குடியிருக்கும் சரத் குமார ஹெட்டிஹேவா ஆகிய நான், மாத்தளை கிவுல, இல. 60/1 எனுமிடத்தில் குடியிருக்கும் ஞானனேஷ்வரா ராணி குணபால என்பவருக்கு மாத்தளை பிரசித்த நொத்தாரிசு ஆர். மணிவண்ணன் அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2007, மே 28 மற்றும் இல. 1968 ஐ உடைய சட்டபூர்வமான அதிகாரப் பத்திரம் மூலம் என்னால் கொடுக்கப்பட்டிருந்த அனைத்து வகையான அதிகாரங்களையும் சட்டபூர்வமான அந்த அதிகாரப் பத்திரத்தையும் இன்று 2008.12. 03 ஆந் திகதி முதல் நான் இரத்து செய்துவிட்டேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இதில் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*இதன்பின் மேற்குறிப்பிட்ட சட்டபூர்வமான அதிகாரப் பத்திரம் மூலம் ஞானேஷ்வரா ராணி குணபாலவினால் செய்யப்படும் எந்த ஒரு செயலுக்கோ, கொடுக்கல் வாங்கல்களுக்கோ நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இதன் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத்குமார ஹெட்டி ஹேவா.*

*2008. 12. 03*

*3 - 250*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11 (5) கீழான அறிவித்தல்**

*''மெக் ஸ்டார் லிமிடட்'' நிறுவனத்தின் பெயர், ''மெக் மெரைன் (பிரைவட்) லிமிடட்'' என மாற்றப்படுவதுடன், பொது கம்பனி என்ற நிலையிலிருந்து ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்படுவதுடன் அமைப்பின் புதிய உறுப்புரைகளை பின்பற்றுவதாகவும் அதன் பங்குதாரர்கள் ஏகமனதாக தீர்மானித்திருப்பதனை இத்தால் அறிவித்துக் கொள்கின்றது.*

*சபையின் கட்டளைக்கிணங்க,*

*மெக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடட்,*
*செயலாளர்கள்.*

*3 - 276*

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) மற்றும் 11 (5) பிரிவுகளின் கீழான பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்**

ஜோர்ஜ் ஸ்ட்ருவட் ஏஜன்சிஸ் (பிறைவேட்) லிமிடெட்
*(முன்பு ஜோர்ஜ் ஸ்ட்ருவட் (ஏஜன்சிஸ்) லிமிடெட்)*

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 11 (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 8 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின்படி ஜோர்ஜ் ஸ்ட்ருவட் (ஏஜன்சிஸ்) லிமிடெட் (முன்னைய பெயர்) என்ற

அதன் பெயரை ஜோர்ஜ் ஸ்ட்ருவட் ஏஜன்சிஸ் (பிறைவேட்) லிமிடெட் (புதிய பெயர்) என 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி கம்பனி பதிவு இலக்கம் பிபீ 303 இன் கீழ் பெயர்மாற்றஞ் செய்துள்ளோம் என்பதையும், இக்கம் பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் "ஸ்ட்ருவட் ஹவுஸ்" இல. 45, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சபையின் கட்டளைக்கிணங்க,

ஜோர்ஜ் ஸ்ட்ருவட் அன்ட் கம்பெனி லிமிடட்,
(கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்)

"ஸ்ட்ருவட் ஹவுஸ்",
இல. 45, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 01.

3 - 312

---

## அட்டோனி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாரவில, வீரஹேன மேற்கு, வெனின்பாக் இல. 115 ஐ சேர்ந்த மெல்லவ தந்திரிகே சுதத் இந்திக ஆகிய நான் 28.10.2005 ஆந் தேதியும் 3096 இலக்கமும் கொண்ட நயினாமடம் பிரசித்த நொத்தாரிசு திரு. ஐ. சி. களு ஆராச்சியால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான அட்டர்னி தத்துவ பத்திரத்தின் மூலம் திரு. மெல்லவ தந்திரிகே ஜானக பேரேரா என்பவருக்கு வழங்கிய சகல தத்துவங்களையும் இன்றைய 25.03.2008 ஆந் தேதி முதல் இரத்துச் செய்துவிட்டேன் என்பதை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன். இனிமேல் மேற்படி தத்துவக்காரர் இப்பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளும் எந்த செயல்களுக்கும் நான் பொறுப்புதாரியல்ல.

எம். டி. சுதத் இந்திக

25.08.2008

3 - 282

---

## அட்டோனி ஜெனரல் தத்துவத்தை இரத்துச் செய்தல்

களுத்துறை வடக்கு, கல்பாத, குருகொட

''கமன்செவன'' இல்லத்தில் வசிக்கும் (முன்னர் இங்கிலாந்து மன்செஸ்டர், 4 ஜி. எஸ். க்ரம்ப்ஸல் க்ளவிலண்ட் வீதி, இல. 7 இல் வசித்த) தோன மஸ்ரின் கம்மன்பில ஆகிய நான் இங்கிலாந்து மன்செஸ்டர் பிரசித்த ஸொலிஸிடர் நஸ்ரின் அலி (NASRIN ALI) அவர்களால் 2007, செத்தெம்பர் 11 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட களுத்துறை வடக்கு, ஹொரண வீதி இல. 527/5, இல்லத்தில் வசிக்கும் லொகுமானகே பியவதி என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டதென பொது மக்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கும் அறிவிப்பதோடு மேற்கூறப்பட்ட லொகுமானகே பியவதிக்கு எனக்காக எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்கு சட்டரீதியான அதிகாரமும் இல்லை என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

தோன மஸ்லின் கம்மன்பில

3 - 288

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டவாக்கத்தின் 9 (1) பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : மெகா கன்ஸ்டிரக்ஸன் அன்ட் சப்ளயர்ஸ் (பிரைவட்) லிமிடட்
கம்பனியின் இல. : பீ. வி. 61641
கூட்டிணைப்பு செய்யப்பட்ட திகதி : 08. 10. 2007
பதிவு செய்யப்பட்ட காரியாலயம் : கொழும்பு வீதி, தில்லையடி, புத்தளம்

கம்பனி செயலாளர்

3-343

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டவாக்கத்தின் 9 (1) பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : யுனிவர்ஸல் ரான்ஸ்போர்ட் கம்பனி (பிரைவட்) லிமிடட்
கம்பனியின் பதிவு இல. : பீ. வி. 60157
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட திகதி : 05. 06. 2007
பதிவு செய்யப்பட்ட காரியாலயம் : இல. 06, 1 ஆம் மாடி, பிரதான வீதி, புத்தளம்

செயலாளர்

3-342

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : சதா சரண பெயரிங்ஸ் (பிரைவட்) லிமிடட்
கம்பனியின் இல. : பி. வி. 66698
பதிவு செய்யப்பட்ட திகதி : 06. 01. 2009
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 399 1/2, சிறி சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10

சபையின் கட்டளைக்கிணங்க,

சாகர சம்பத் அபேரத்ன,
பணிப்பாளர்.

3-348

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல் :-*

*கம்பனியின் பெயர் : சிட்ஸ்பெறி (பிரைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் இலக்கம் : பி. வி. 66854*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, சனவரி 23*

*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.410/31,பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7*

*வலிமுனி ஷியாமி அஷாதி மெண்டிஸ்,*
*பணிப்பாளர்.*

*3-243*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டவாக்கத்தின் 9 (1) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் : சதா சரண மோட்டஸ் (பிரைவட்) லிமிட்டட்*
*கம்பனியின் இல. : பி. வி. 66699*
*பதிவு செய்யப்பட்ட திகதி : 06. 01. 2009*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 399 1/2, சிறி சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10*

*சாகர சம்பத் அபேரத்ன*
*பணிப்பாளர்*

*3-349*

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தி) ன் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

*(திரு. விஜேரத்ன மெதகங்கொட (காலஞ்சென்ற) மற்றும் திரு. திலன்த இஷார விஜேரத்ன ஆகியோரின் கடன்பொறுப்புகளுக்காக ஈடுவைத்த நுகவெல கிராமத்தில் அமைந்த அல்லகெவத்த ஹேனய்ாய அல்லது பண்டாரஹேன அல்லது நுகவெல எஸ்டேற் (பகுதி) என அழைக்கப் படும் ஈடு வைக்கப்பட்ட ஆதனம்.)*

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.05.16 ஆந் திகதிய 1550 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2008. 05.08 ஆந திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்", ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய நிலுவை முதலையும் விற்பனை திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, மஹாநாம ட்ரைவ் பிற்றக்கோட்டை, கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த* R. S. M. *ஏலத்தின் உத்தரவு பெற்ற ஏலதாரர் 2009.03.28 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

### அட்டவணை

*சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், அட்டகலன் கோரளை பன்னில்பற்றுவில் நுகவெல கிராமத்தில் அமைந்த அல்லகெவத்த ஹேன்யாய அல்லது பண்டாரஹேன அல்லது நுகவெல எஸ்டேற் (பகுதி) என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். எஸ். தியகம தயாரித்த 1982.12.04 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 781/1இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ; வடக்கில் : டபிள்யு மெதகங் கொடக்குச் சொந்தமான அதே காணியின் பகுதியும் ; கிழக்கில் : றோட்டும் ஓ. ஜீ. டீ. குணசிங்கஹவுக்குச் சொந்தமான அதே காணியின் பகுதியும் ; தெற்கில் : எஸ். எம். ஹூஸைன் மற்றும் எம். ஜீ. தனோரிஸ் ஆகியோருக்குச் சொந்தமான அதே காணியின் பகுதியும் ; மேற்கில் : ஜீ. ஜீ. சோமபாலவுக்குச் சொந்தமான அதே காணியின் பகுதியும் எல்லைகளாகக் கொண்டு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 29.25பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடமும் சகலதும் ஆகும். இது இரத்தினபுரி காணிப்பதிவகத்தில் எப் 210/227 இல் பதிவு செய்யப்பட்டது.*

*பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,*

*எஸ். டி. சில்வா,*
*தொடர்பாடல் முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*அறவிடல் - தொகுதி,*
*இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,*
*தலைமை அலுவலகம், கொழும்பு 1*

*3 - 323*

---

## இலங்கை வங்கி

*இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

*கடன் தொடர்பு இல. 576/07, 521/06*

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை*

*சனநாயக சோசலிஸக் குடியரசின் 2008.12.11 ஆந் திகதிய 1580 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2008.12.01 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, டொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்கிரம 2009. 06. 03 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டத்தில் வெல்கம்பற்று கோரளை தேவமெதி ஹத்பற்றுவில் வாரியபொல பிரதேச சபை எல்லைகளுள் கினிமான்ன கிராமத்தில் அமைந்த "கொட ஹேன்யாய" என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். விஜேதுங்க தயாரித்த 2001, ஜனவரி 7 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1224 இல் விபரித்த துண்டு 14 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ; வடக்கில் கட்டுபொத்தயிலிருந்து மஹகெலிய வரை பி டபிள்யூ. றோட்டும், ; கிழக்கில் : துண்டுகள் 15 மற்றும் 16 உம் ; தெற்கில் : துண்டு 18 உம் ; மேற்கில் : துண்டு 13 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட வரைபடம் இல. 1224 இன் படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருணாகல் காணிப்பதிவகத்தல் டி. 1260/61 இல் பதிவு செய்யப்பட்டது.*

*மேற்குறிப்பிட்ட கினிமான்ன கிராமத்தில் அமைந்த 'கொடஹேன்யாய' என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1224 இல் விபரித்த துண்டு 15 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ; வடக்கில்: கட்டுபொத்தயிலிருந்து மஹகெலிய வரை பிடபிள்யுடீ றோட்டும்; கிழக்கில் : பிரதேச சபை றோட்டும் ; தெற்கில் : துண்டு 16 உம் ; மேற்கில் : துண்டு 14 உம் எல்லைகளாகக் கொண்டு மேற் குறிப்பிடப்பட்ட வரைபடம் இல. 1224 இன் படி பத்து தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.8பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருணாகல் காணிப் பதிவகத்தில் டி 1260/60 இல் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட வரைபடம் இல. 1224 இல் துண்டுகள் 8, 59 மற்றும் 65 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கங்கள் மீதான வழி உரிமையுடனும் ஆகும்.*

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி*

*திரு. ஏ. ஜயவர்த்தன,*
*முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*குளியாப்பிட்டிய கிளை.*

*3 - 328*

**டீஎவ்சீசீ வர்தன வங்கி லிமிடெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***25416 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், அலுத்குரு கோரளே, றாகம் பத்துவில், கம்பஹா நகர சபை எல்லைக்கு உட்பட்ட வரி மதிப்பீட்டு இல. 96/47, ஜா-எல வீதி, மெதகம, கம்பஹா என்ற முகவரியில் அமைந்துள்ள தெஹிகஹகும்பர மற்றும் ஹல்கஹ குமபுர என அழைக்கப்படுவதும் (தற்பொழுது ஹைய்லன்ட் எனப்படும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே. பீ. என். ஜயசுந்தர அவர்களால் வரையப்பட்டு, 2007, ஒற்றோபர் 23 ஆந் திகதியிடப்பட்ட 6846 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்ட பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணி.***

***காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 37.1பே.***

***அதிலுள்ள கட்டடங்கள். மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டப்ளியூ. ராஜகருண அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதியிடப்பட்ட, 25416 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கம்பஹாவைச் சேர்ந்த ஏக்கநாயக்க முதியான்சேலாகே மஹிந்த பண்டாரநாயக்க என்பவரால் DFCC வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து***

*DFCC வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.*** - ஏலவிற்பனையின் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூ. 33,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011- 2440366/77 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎவ்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy @sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

3- 287

---

### பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் பி. சின்னத்தம்பி அவர்களால் வரையப்பட்ட 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 2798 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3040 மற்றும் 3041 எனக் குறிப்பிடப்பட்ட (சுவடு 129 இன் 261 ஆவது மடிவுப்புறை வெள்ளவத்தை 02 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட வரைபடத்தில், துண்டு 1824 மீள் அளவை செய்யப்பட்டு துண்டுகளாக்கப்பட்ட) பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டது மான, மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பாமன்கடை மேற்கு, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 29 கொழும்பு மாநகர சபை எல்லைக் குட்பட்ட நுககஹவத்தை என அழைக்கப்படும் காணி. அதில் அமைந்துள்ள கட்டடம் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக**

**காணியின் விஸ்தீரணம் : துண்டு 3040 - 00ஏ. 00றூ. 9.67பே.**
**துண்டு 3041 - 00ஏ. 00றூ. 8.67பே.**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 மற்றும் 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ஆந் திகதியிடப்பட்ட 1954 மற்றும் 1956 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் லேன்ட் மார்க் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சிக்கு (முன்னர் பான் ஏஷியா பாங் லிமிட்டெட் என்றும் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் என்றும் அழைக்கப்பட்டு வந்தது) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

**காணிக்குச் செல்லும் வழி.**- வெள்ளவத்தை சந்தியில் இருந்து (சமிக்ஞை விளக்கு சந்தி) காலி வீதி ஊடாக தெஹிவளை நோக்கி வெள்ளவத்தை கொமர்ஷல் வங்கி வரை சுமார் 250 மீற்றர் தூரம் வரை சென்று, இடதுபுறம் உருத்திரா மாவத்தையில் 125 மீற்றர் வரை பயணஞ்செய்தால் இந்த காணியைச் சென்றடையலாம். இது உருத்திரா மாவத்தையில் இடதுபுறத்தில் அமைந்துள்ளது.

பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி யினால் எமக்களிக் கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % ;
(4) மொத்த விளம்பரச் செலவில் 50%, 90,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெளியான ''சிலோன் டெயிலி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய செய்திப் பத்திரிகைகளையும், 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள், உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங் களை, சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கொப்பரேஷன் பீஎல்சி, 450, காலி வீதி, கொழும்பு 3 எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலகக்ங்கள் : 2565573, 2565565

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy @sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

3- 286

**பான் ஏஷியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீஎல்சீ - வத்தளை கிளை**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக் கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்டது)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**வத்தளை, தெலங்கபாத்தவில் அமைந்துள்ளதும் தெலங்கபாத்த வீதி வரிமதிப்பு இல. 103/9 ஐக் கொண்ட பெறுமதிமிக்க காணி மற்றும் கட்டிடங்கள் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை தெற்கு, றாகம் பற்று, வத்தளை மாபோலை நகர சபை எல்லைகளுக்குள் தெலங்கபாத்தவில் அமைந்துள்ளதும் தெலங்க பாத்த வீதி, வரிமதிப்பு இல 103/9 (உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டி. ஜே. வீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981. 09.20 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6209 இல் குறிப்பிடப்பட்ட துண்டு சீ இன் பாகமாக இருக்கின்ற) ஐக் கொண்டதும் ''பொகுனபொடவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹோக் ஆர். சமரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1991. 09. 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1420 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாள மிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) ஏல விற்பனை**

**(காலணியின் விஸ்தீரணம் : 7.50 பேர்ச்சுக்கள் )**

*(பேரியாகொடகே நிசாந்த ஜுடே, பதிவு இல. பீகியு 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சி இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, செத்தெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1417 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்)*

வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, மார்ச்சு 31 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2009.02.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி ''சிலோன் டெயலி நியுஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர்ஒளி'' ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**வளவுகளுக்கு உட்பிரவேசிக்கும் வழி.**- பேன் ஏசியா வங்கி வளவுகளுக்கு எதிரிலிருந்து கொழும்பு வீதி வழியே ஒரு சில மீற்றர் சென்று தெலங்கபாத்த வீதிக்கு இடப்பக்கம் திரும்பி வரிமதிப்பு இல. 103ஐக் கொண்ட ஆதனம் வரை ஏறக்குறைய 700 மீற்றர் சென்று 10 அடி அகல உட்பிரவேசிக்கும் வழிக்கு இடப்பக்கம் திரும்பவும் இவ்வாதனம் இவ்வுட்பிரவேசிக்கும் வழியின் வலதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% அதேபோல் பொ.சே.வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் கட்டணம் 2.5 % ;
(4) மொத்த விளம்பரச் செலவுக்கட்டணம் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 3,000 முதலியன.

கொள்முதல் விலையின் மீதி 90% ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

உரித்து உறுதிகளையும் வேறு ஆவணங்களையும் பார்வை யிடுவதற்காக.- ''கொழும்பு 3, காலி வீதி, இல. 450 பேன் ஏசியா கூட்டுத்தாபனம் பீஎல்சி, சிரேட்ட முகாமையாளர் - சட்டசம்பந்தமானது'' அவர்களுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 2565573, 2565570, 2565571 அல்லது 2565565

பீ. கே. ஈ. சேனாதிபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் பட்டய ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656/ 0777 - 672082
தொலைநகல் இல. : 2871184

3- 313

---

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை, ஏல விற்பனை**

கடன் தொடர்பு இல. : 517/2006

''இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.09.05 ஆந் திகதிய 1566 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2008.09.01 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, டொரின்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏலதாரர்கள் 2009.05.27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் கட்டுகம்பொல ஹத்பற்று மயுரவதி கோரளையில் தியடோரா கிராமத்தில் அமைந்த தியடோராவத்த என அழைக்கப்படும் காணியின் அளவையாளர் நாயகம்

தயாரித்த F. V. P. 928 இல் துண்டு 193 என அடையாளமிட்ட காணித்துண்டு : வடக்கில் : துண்டு 189 உம் ; கிழக்கில் : துண்டு 194 உம் ; தெற்கில் : துண்டு 191 என அடையாளமிட்ட பிரவேசப்பாதையும் ; மேற்கில் : துண்டு 192 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டேயர்கள் சைபர் தசம் ஒன்று ஒன்பது மூன்று (ஹெக் 0.193) விஸ்தீரணமுடையது. இது குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் குளி/கே/14/178 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேலே விபரித்த காணி அண்மைய அளவையின்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பிட்ட தியடோராவில் அமைந்த உத்தரவுபெற்ற நில அளவையாளர் H. A. M. C. பண்டார தயாரித்த 2006, யூன் 27 திகதியிட்ட வரைபடம் இல. 4399 இல் துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : F. V. P. 928 இல் துண்டு 189 தற்சமயம் H. R. A. தர்மசேனவின் வாரிசுகள் உரிமைகோரும் காணியும் ; கிழக்கில் : F. V. P. 928 இல் துண்டு 194 தற்சமயம் H. P. ஆரியசேன உரிமைகோரும் காணியும் ; தெற்கில் : F. V. P. 928 இல் தண்டு 191 தற்சமயம் றோட்டும் (பிரதேச சபை) ; மேற்கில் : F. V. P. 928 இல் துண்டு 192 தற்சமயம் H. P. பியசேனவின் வாரிசுகள் உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் முப்பத்தெட்டு தசம் இரண்டு ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ.1றூ.38.29பே.) (ஹெக். 0.198) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஏ. ஜயவர்தன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாப்பிட்டிய கிளை.

3-327

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பட்டது.